முருகப்பெருமான் துணை

உலக ஞானத்தலைவன் முருகப்பெருமான் துறையூர் ஓங்காரக்குடில் ஆசான் ஆறுமுக அரங்க மகா தேசிகருக்கு அருளிய ஞான அறிவுரை ஆசி காண்டம்

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1442

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**10.09.2023,** ஞாயிற்றுக்கிழமை

1. ஞான சித்திமிகு அரங்கனே
   ஞானிகள் பலம்கொண்ட தேசிகனே
   வானவர்கள் போற்றுகின்ற குருராஜனே
   வாழுகின்ற ஞானியே வள்ளலே
2. வள்ளலே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
   வழங்குவேன் ஞான அறிவுரை ஆசி
   (சோபகிருது வருடம் ஆவணி மாதம் 24 ம் நாள், 10.09.2023, ஞாயிற்றுக்கிழமை)
   இல்லாமை போக்கி இந்த கலியுகத்தை
   எல்லா வளமும் தந்தருள ஆற்றலாக
3. வல்லமைபட வந்த அரங்கனே
   வள்ளலே உந்தன் தர்மம் உலகை ஆள
   வையகமே தர்மலோகமாகி
   வணங்கும் மக்களெல்லாம் தர்மவான்களாக மாறி
4. மாறியே இந்த கலியுகத்தில்
   மகான் அரங்கன் உன் தொண்டர்படைகளாக
   ஆறுதலாக உலகோர் அனைவரும் இணைந்து
   அகிலத்தில் ஞானப்படைகள் என்கின்ற மகா சக்தி
5. சக்திபெருகி இந்த கலியுகமே
   சகலருக்கும் ஞானம் தரும் வண்ணம்
   உத்தமர்களாய் கலியில் அழியாமை பெற்ற
   உயர் மகான்களாய் யாவரும் மாற்றம் பெறுவர்
6. மாற்றத்தை தரும் ஒரே ஞானி
   மகத்துவமிக்க அரங்கன் நீயப்பா
   அப்பனே உன் அவதாரம் உலகம் அறிந்தால்
   அகிலத்துக்கே நன்மை நடக்கக்கூடும்

7. வகைபட உன் பெருமை அறிந்து உலகோர் இணைந்தால்
வருபவர்க்கெல்லாம் இனி பிறவாத பேறு கிட்ட நேரும்
பெருமைகொண்டு அரங்கன் உன் புகழ்பாடி உலகோர்
பேருலகமெங்கும் தர்மசாலைகள் அமைத்து

8. அமைத்து அரங்கன் உன்
அவதாரத்தை பரைசாற்றினால் போதும்
அகிலமெல்லாம் அரங்கன் தர்மமும் ஞானமும்
அளவில்லா சக்தியாகப் பெருகி அகிலத்தில்

9. ஞானிகள் வெளிப்பாடு அதிகமாகி
ஞானவான்கள் நிறைந்த பூமியாக
ஞான பூமியாக இந்த உலகம் மாற்றம் பெறும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–